**சார்பு நீதிமன்றம், அவிநாசி.**

**முன்னிலை: திரு. K.சுரேஷ்குமார், B.A., B,L.,**
**சார்பு நீதிபதி, அவிநாசி.**

2023 ஆம் ஆண்டு. ஜுன் மாதம் 27–ஆம் நாள் செவ்வாய்கிழமை

**<u>அசல் வழக்கு எண். 95/2023</u>**

மாரப்பன் ... வாதி

/எதிராக/

1) எம்.பழனிச்சாமி

2) சார்பதிவாளர் (Registration of Documents)
சார்பதிவாளர் அலுவலகம், அவிநாசி ... பிரதிவாதிகள்

இவ்வழக்கானது இந்நீதிமன்றத்தில் 10.03.2023 அன்று கோப்பிற்கு எடுக்கப்பட்டு 26.06..2023 தேதியில் என் முன்பாக இறுதி விசாரணைக்காக வந்த போது வாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.எஸ்.மனோகரன் அவர்கள் ஆஜராகியும், பிரதிவாதியை அழைத்தும் ஆஜரின்மையால் அவரைப் பொறுத்து தோன்றாத் தரப்பினராகக் கருதப்பட்டும், வாதி தரப்பு வாதங்கள் கேட்கப்பட்டும், ஆவணங்களை பரிசீலித்தும் இது நாள் வரை இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து வந்த இவ்வழக்கில் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்

**<u>தீர்ப்புரை</u>**

வாதி பிரதிவாதிக்கு தாவா தொகை ரூ.9,98,000/–க்கு வருடத்திற்கு 12% வட்டியும், சேர்த்து செலுத்த வேண்டும் என்றும், செலவுத் தொகை கோரியும் வாதியால் இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. **வழக்குரையின் சுருக்கம் பின்வருமாறு:–**

கடந்த 12.12.2021 தேதியன்று முதல் பிரதிவாதி தனது மகள் வீடு கட்டும் முகாந்தரமாக வாதியிடம் கடனாக ரூ.10,00,000/– பெற்றுக் கொண்டு அதற்கு

ஆதரவாக கடனுறுதிச்சீட்டு எழுதிக் கொடுத்தார். மேலும் மேற்படி முதல் பிரதிவாதி தான் கடனாக பெற்ற தொகைக்கு ஆண்டுக்கு 12% வட்டியும் சேர்த்து தருவதாக ஒப்புக் கொண்டார். மேற்படி கடன் தொகைக்கு வட்டியோ அல்லது அசல் தொகையோ நாளது தேதிவரை எந்த ஒரு பணமும், செலுத்தவில்லை. முதல் பிரதிவாதிக்கு சொந்தமான பூமியினை வாதிக்கு தெரியாமல் விற்பனை செய்ய எத்தனித்ததால் இந்த வழக்கினை அறிவிப்பு ஏதும் இன்றி தாக்கல் செய்ததாகவும், இந்த வழக்கு தாக்கல் செய்திட்ட நாளன்று அசலும் வட்டியும் சேர்ந்து ரூ.11,48,000/- வந்த போதிலும் முதல் பிரதிவாதி மனுதாரரின் நெருங்கிய உறவினர் என்கிற வகையில் ரூ.1,50,000/-ஐ விட்டு கொடுத்து ரூ.9,98,000/-ஐ மட்டும் கோரி இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

4. பிரதிவாதிகள் தரப்பில் அழைத்தும் ஆஜரின்மையால் அவர்களை பொறுத்து தோன்றா தரப்பினர்களாக கருதப்பட்டு ஒருதலைபட்சமாக்கப்பட்டுள்ளனர்.

5. வாதி தரப்பில், வாதி வா.சா.1 ஆகவும், வா.சா.2 ஆக இளங்கோவன் என்பவர் விசாரிக்கப்பட்டு, வா.சா.1ன் மூலம் வா.சா.ஆ.1 ஆவணமும், வா.சா.2-ன் மூலம் வா.சா.ஆ.2 ஆவணம் குறியீடு செய்யப்பட்டுள்ளது. பிரதிவாதிகள் ஒருதலைபட்சமானதால் அவர்கள் தரப்பில் வாய்மொழி மற்றும் ஆவண சாட்சியங்கள் ஏதும் குறியீடு செய்யப்படவில்லை.

6) **தீர்வு:-**

வாதி இவ்வழக்கில் தன்னை வா.சா.1 ஆக விசாரித்துக்கொண்டுள்ளார். அவரது சாட்சியத்தில், கடந்த 12.12.2021 தேதியன்று முதல் பிரதிவாதி தனது மகள் வீடு கட்டும் முகாந்தரமாக வாதியிடம் கடனாக ரூ.10,00,000/- பெற்றுக் கொண்டு அதற்கு ஆதரவாக கடனுறுதிச்சீட்டு எழுதிக் கொடுத்ததாகவும், மேலும் மேற்படி முதல் பிரதிவாதி தான் கடனாக பெற்ற தொகைக்கு ஆண்டுக்கு 12% வட்டியும் சேர்த்து தருவதாக ஒப்புக் கொண்டதாகவும், மேற்படி கடன் தொகைக்கு வட்டியோ அல்லது அசல் தொகையோ நாளது தேதிவரை எந்த ஒரு பணமும், செலுத்தவில்லை என்றும்,

முதல் பிரதிவாதிக்கு சொந்தமான பூமியினை தனக்கு தெரியாமல் விற்பனை செய்ய எத்தனித்ததால் இந்த வழக்கினை அறிவிப்பு ஏதுமின்றி தாக்கல் செய்ததாகவும், இந்த வழக்கு தாக்கல் செய்திட்ட நாளன்று அசலும் வட்டியும் சேர்ந்து ரூ.11,48,000/- வந்த போதிலும் முதல் பிரதிவாதி தனக்கு நெருங்கிய உறவினர் என்கிற வகையில் ரூ.1,50,000/-ஐ விட்டு கொடுத்து ரூ.9,98,000/-ஐ மட்டும் கோரி இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக சாட்சியம் அளித்துள்ளார்.

7) இந்த வழக்கில் வாதி தரப்பில், வாதி வா.சா.1 ஆக முன்னிலையாகி வழக்குரை சங்கதிகளை ஒத்துரைந்து சாட்சியமளித்துள்ளார். வா.சா.1 அவரது முதல் விசாரணையில், தான் இந்த வழக்கின் வாதி என்றும், வாதி தரப்பில் 1ம் சாட்சியாக சாட்சியமளிக்கிறேன் என்றும், பிரமாண வாக்குமூலத்தை தாக்கல் செய்வதாகவும், அதில் உள்ள சங்கதிகள் எல்லாம் உண்மை என்றும், அதில் உள்ளது தன்னுடைய கையெழுத்து தான் என்றும், 12.12.2021 தேதியிட்ட கடனுறுதிச்சீட்டு வா.சா.ஆ.1 குறியீடு செய்யப்படுகிறது என்றும் சாட்சியமளித்துள்ளார்.

8) மேலும் வாதி தரப்பில் வா.சா.2 ஆக இளங்கோவன் த/பெ.நடராஜன் என்பவர் சாட்சியமளித்துள்ளார். வா.சா.2 ஆனவர் வா.சா.ஆ.1 கடனுறுதிச்சீட்டில் கையெழுத்து செய்த நபராவார். வா.சா.2-ன் முதல் விசாரணை சாட்சியத்தில் கூறியுள்ள சங்கதிகள், வாதியின் சாட்சியத்தை ஒத்துரைத்து அமைந்துள்ளது.

9) மேலும், வா.சா.1 மற்றும் வா.சா.2ன் சாட்சியத்தை பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்யவில்லை. வாதி தரப்பு சாட்சியம் மற்றும் சான்றாவணங்களை முறியடிக்கும் வகையில் பிரதிவாதிகள் தரப்பில் சாட்சியமோ, சான்றாவணங்களோ முன்னிலைப்படுத்தாத காரணத்தினால் வாதி தரப்பு சாட்சியம் மற்றும் சான்றாவணங்களின் அடிப்படையில் வாதி கோரிய பரிகாரம் வாதிக்கு கிடைக்கக் கூடியது என்றே இந்நீதிமன்றம் முடிவு செய்கின்றது.

**முடிவாக**,

வழக்கு அனுமதித்து தீர்ப்பளிக்கப்படுகிறது. வாதிக்கு பிரதிவாதி தாவா

தொகையான ரூ.9,98,000/–ஐ இவ்வழக்கு தாக்கல் செய்த தேதியிலிருந்து தீர்ப்பாணை தேதி வரை 9% சதவிகித வட்டியுடன் சேர்த்து செலுத்த வேண்டுமென்றும், அதற்கு பின்பு தொகை செலுத்தப்படும் வரை தாவா அசல் தொகைக்கு 6 சதவிகித வட்டியுடன், தாவா செலவுத்தொகையையும் சேர்த்து செலுத்த வேண்டுமென்றும் தீர்ப்பளிக்கப்படுகிறது.

இந்த தீர்ப்புரையானது என்னால் தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்ச செய்யப்பட்டு என்னால் சரிபார்க்கப்பட்டு இன்று 2023 ஆம் ஆண்டு ஜுன் மாதம் 27–ஆம் நாள் என்னால் கையெழுத்திடப்பட்டு, இந்நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

(ஒம்/–) K.சுரேஷ்குமார்,
சார்பு நீதிபதி,
அவிநாசி.

**வாதி தரப்பு சாட்சிகள்:**

வா.சா.1 – மாரப்பன் (வாதி)
வா.சா.2 – இளங்கோவன்

**வாதி தரப்பு சான்றாவணங்கள்:**

| வ.எண். | நாள் | ஆவணங்களின் விபரம் |
|---|---|---|
| வா.சா.ஆ.1 | 12.12.2021 | வாதிக்கு 1ம் பிரதிவாதி எழுதிக் கொடுத்த கடனுறுதிச்சீட்டு – அசல் |
| வா.சா.ஆ.2 | – | கடனுறுதிச் சீட்டில் உள்ள வா.சா.2 ன் கையொப்பம் |

**பிரதிவாதி தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள்** : இல்லை

(ஒம்/–) K.சுரேஷ்குமார்,
சார்பு நீதிபதி,
அவிநாசி.